# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1426/7 - 2006 ජනවාරි 02 වැනි සඳුදා - 2006.01.02

*1426/7 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) : உள்ளூராட்சி

### உள்ளூராட்சி அறிவித்தல்கள்

திருத்தம்

**1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைகள் சட்டம்**

1985 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்ளூராட்சிச் சேவைகள் (திருத்தச்) சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைகள் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் மாகாண சபைகள் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சர் ஆகிய என்னால் ஆக்கப்பட்டு 2005.10.25 ஆந் திகதிய 1416/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைகளின் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலுள்ள தவறுகள் இத்தால் திருத்தப்பட்டு குறித்த 3 (1) ஆம் பந்திக்குப் பதிலாக பின்வரும் புதிய பந்தி பதிலீடு செய்யப்படுகின்றது.

குறித்த கட்டளைக்கு ஏற்புடைய சிங்கள உரை மாற்றமின்றி இருக்கும்.

ஜனக பண்டார தென்னக்கோன்,
மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
2005, திசெம்பர் 30.

**உரை**

3.(1) ஓய்வுபெற்றுள்ள எவரேனுமொருவர் தமது பதவியிலிருந்து ஓய்வுபெற்ற சந்தர்ப்பத்தில் அவரது பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பள அளவு மற்றும் அவருக்கு உரித்தாகக் காணப்பட்ட வருடாந்த சம்பள நிலையைக் கருத்திற்கொண்டு பொது நிர்வாக அமைச்சுச் செயலாளரினால் சம்பள நிர்ணயம் சம்பந்தமாகக் காலத்துக்குக் காலம் விடுக்கப்பட்ட திருத்த சுற்றுநிருபங்களைக் கவனத்திற்கொண்டு 1996, திசெம்பர் மாதம் 31ஆந் திகதி வரை அவர் சேவையில் ஈடுபட்டிருப்பின் அன்றைய தினம் அவருக்கு உரித்தாகக் கூடியதாக உள்ள வருடாந்தச் சம்பள நிலை தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*1-381*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.